நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 2011–2012–ல் 52 அலுவலகங்களும், 2012–2013–ல் 48 அலுவலகங்களும், 17 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்களில் 29 சார் பதிவாளர் அலுவலகங்களும் கட்டுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான காங்கேயம் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 220, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**220—**

## பேருந்து வசதி

***22925—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராமேஸ்வரத்திலிருந்து குருவாயூருக்கு நேரடியாகப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, இரண்டு மாநில போக்குவரத்துத் கழகங்களுக்கிடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப இராமேஸ்வரத்திலிருந்து குருவாயூருக்கு நேரடிப் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம், இந்தியா முழுவதிலிருந்து*

2013 ஏப்ரல் 15]

வரும் பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் வரக்கூடிய ஓர் ஊர். கேரளாவிற்கும், இராமேஸ்வரத்திற்கும் இடையே அரசுப் பேருந்து சேவை எதுவும் இல்லாத காரணத்தினால்தான், குருவாயூருக்கும், இராமேஸ்வரத்திற்கும் இடையே அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக புதிய பேருந்துத் தடம் இயக்கப்பட வேண்டும் என்ற கேள்வியை நான் எழுப்பினேன். தமிழக அரசு அதற்கு ஆவன செய்யும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தமைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இராமேஸ்வரத்திலிருந்து பாண்டிச்சேரிக்கு, வேளாங்கண்ணி, நாகூர் வழியாக புதிய பேருந்துத் தடம் அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று வினவ விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் 37 புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற வழித்தடங்களில் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில், ஆய்வு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. அதேபோல, இராமேஸ்வரத்திலிருந்து திருப்பதிக்கும் பேருந்து இயக்கினால் அதுவும் பக்தர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் பயன் உள்ளதாக இருக்கும் என்பதைக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்தத் தருணத்தில் 2 செயல்பாட்டுக்காக நன்றி

தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். பட்ஜெட் தொடர்பான விவாதத்திலே நான் கலந்துகொண்டு பேசியபோது, T.N.P.S.C.–யினுடைய புதிய தேர்வு முறையில் தமிழுக்குரிய முக்கியத்துவம் குறைக்கப்பட்டிருக்கின்றது, அது மாற்றப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை முன்வைத்தேன். இந்தக் கோரிக்கையை ஏற்று, T.N.P.S.C. தேர்வில் ஏற்படுத்தியிருக்கக்கூடிய மாற்றத்தை திருத்தி, தமிழுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கக்கூடிய ஓர் உத்தரவைப் பிறப்பித்தமைக்காக (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து மாணவர்களின் சார்பாக, மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, உயர் கல்வி மானியக் கோரிக்கையில் பேசும்போது ஏப்ரல் 6 ஆம் தேதி TANCET என்ற எம்.பி.ஏ. தேர்வையும், சில தன்னாட்சிக் கல்லூரிகளில் (Autonomous Colleges) செமஸ்டர் தேர்வையும் அதே நாளில் வைத்திருக்கிறார்கள், இது மாணவர்களை பாதிக்கும் என்று சொன்னேன். தனியார் கல்லூரிகள் நடத்துகின்ற தேர்வை இரத்து செய்து, TANCET தேர்வை அனைத்து மாணவர்களும் எழுதுவதற்கு வசதி செய்தமைக்காகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக, மாணவர்கள் சார்பாக என் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட வால்பாறை பகுதியில், கேரள மாநிலத்தைச் சார்ந்திருக்கக்கூடிய மலையாளிகள் அதிகமாக வாழ்ந்து வருகின்றார்கள். எனவே, வால்பாறையிலிருந்து பாலக்காட்டிற்கும், வால்பாறையிலிருந்து கொச்சி, எர்ணாகுளத்திற்கும் பஸ் விடுவதற்கான வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்க முன்வருமா என தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர்

2013 ஏப்ரல் 15]

சார்பாக, கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடி அசைக்கப்பட்டு, 75 புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய பயன்பாட்டிற்கு சென்றுகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற பகுதியில், இரண்டு மாநிலங்களுக்கிடையே ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு, அதன் பிறகே பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். அந்த ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படுகின்றபொழுது, பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில், ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 221, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**221—**

## சிறப்புப் பொருளாதார மண்டலம்

***19611—திருமதி எஸ். விஜயதரணி:**

*மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மின்னணு நிறுவன சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2002 ஆம் ஆண்டு, அரசு அறிவித்த தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையின்படி, சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப்